நகராட்சி அலுவலகம்

உசிலம்பட்டி

நாள். 07.03.2025

<u>சாதாரணக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு குரோதி வருடம் மாசி மாதம் 28 மார்ச் நாள்.12.03.2025 புதன்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் உசிலம்பட்டி நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

---

<u>மன்றப்பொருள் –1</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் நகராட்சி அலுவலக கருவூலத்தில் தினம் தோறும் பொதுமக்களால் செலுத்தப்பட்டு மேற்படி தொகையானது நகராட்சி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி அலுவலக கருவூலத்தில் வசூல் செய்யப்பட்ட தொகையினை பாதுகாப்பாக வைப்பதற்கு இந்நகராட்சியில் இரும்பு பெட்டகம் (Locker) ஏதும் இல்லாத காரணத்தினால் வசூல் செய்யப்பட்ட தொகையினை தினம் தோறும் பாதுகாப்பாக வைப்பதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று இரும்பு பெட்டகம் (Locker) கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.நிர்வாக நலன் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.234/2025/இ1

தீர்மான எண் 798

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–2</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் நகராட்சிக்கு சொந்தமான 125 எண்ணம் சிறு மின் விசை பம்பு மூலம் 0.23 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி 01. முதல் 12 வரை வார்டுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 5 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.236/2025/இ1)

தீர்மான எண் 799

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்–3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் நகராட்சிக்கு சொந்தமான 125 எண்ணம் சிறு மின் விசை பம்பு மூலம் 0.23 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி 13 முதல் 24 வரை வார்டுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 5 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00/– (இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.235/2025/இ1 )
தீர்மான எண் 800
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

மன்றப்பொருள்–4

வைகை பிரத்யோக குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 4.00 முதல் 4.50 MLD அளவு குடிநீர் உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டியில் ஏற்றம் செய்து 01 முதல் 24 வார்டுகளுக்கும் நகராட்சி பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பழைய பகிர்மான குழாய்களில் நீர் அழுத்தம் காரணமாக அவ்வப்போது உடைப்பு ஏற்படுகிறது. மேற்படி பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் வால்வுகளை பழுதுநீக்கம் செய்ய 5 மாத காலத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00 /– (இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.231/2025/இ1)
தீர்மான எண் 801
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

மன்றப்பொருள்–5

இந்நகராட்சி இயங்கி வரும் அலுவலக கட்டிடம் 40 வருடங்களுக்கு மேலான மிகவும் பழமையான கட்டிடமாகும். மேற்படி அலுவல கட்டிடத்தின் ஒரு பகுதி ஓட்டு கட்டிடமாக இருப்பதால் ஆங்காங்கே சேதமடைந்து மழை காலங்களில் மழை நீர் உட்புகுந்து கோப்புகள் மற்றும் கணிணி பொருட்கள் சேதமடைகிறது. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு அலுவலக கட்டிடத்தின் நகர்மன்ற தலைவர் அறை, பொது பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆகிய பகுதிகளில் மராமத்து பணி மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.232/2025/இ1)

தீர்மான எண் 802

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

மன்றப்பொருள்-6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 பேரையூர் ரோடு மேற்கு தெருவில் தெருவின் நடுவில் உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க மின் வாரிய DCW திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகை ரூ.12310/- மற்றும் சரக்கு சேவை வரி 18 % செலுத்துமாறு உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 99/2025/இ1 )

தீர்மான எண் 803

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

மன்றப்பொருள்-7

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM ) திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மானியத் தொகை ரூ.7303.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 7433.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரத்யோக குடிநீர் திட்ட பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முடிக்கப்பட்டு 25.05.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது மேற்படி திட்டத்தின் சோதனை ஓட்ட காலம் முடிவடைந்து 31.12.2024 உடன் ஒப்பந்தாரரின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு காலம் முடிவடைந்தததது. மேற்படி திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்ட உடன் ஏற்கனவே இந்நகராட்சியில் செயல்பாட்டில் இருந்த எஸ் மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நீர் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் 867 CWSS Habitation திட்டத்தின் கீழ் ECO Production Company மூலம் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியின் போது இந்நகராட்சிக்கு சொந்தமான எஸ் மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் விநியோக பணிக்காக பதிக்கப்பட்டுள்ள பிரதான குடிநீர் பகிர்மான குழாய் (250 mm AC Pipe 70 மீட்டர் நீளத்திற்கு) மகாலிங்கபுரம் மேற்கு பகுதி மற்றும் கல்லூத்து காலணி அருகே (250 mm AC Pipe 20 மீட்டர் நீளத்திற்கு) சேதமடைந்துள்ளது. எனவே தற்போது வைகை பிரத்யோக குடிநீர்

திட்டத்தின் பிரதான குழாய்களில் உடைப்பு ஏற்படும் போது குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது.

மேலும் வைகை ஆற்றுப்படுகையில் கிணற்றில் உள்ள நீர் மூழ்கி மோட்டார் 7.5 Hp. 10HP மற்றும் Starter பழுது ஏற்பட்டு கேபிள் வயர்கள் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டு துண்டிக்கப்பட்டுள்ளது மற்றும் அங்கே அமைந்துள்ள மின் Transformer பழுது ஏற்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே செயல்பாட்டில் இருந்து நிறுத்தப்பட்ட எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலைய கிணற்றில் உள்ள 7.5 Hp. 10HP மோட்டர்களை கழற்றி பழுது நீக்கம் செய்யவும் , வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்ட கேபிள் வயர்களுக்கு புதிதாக கேபிள், PVC பாதுகாப்பு குழாய் அமைத்து பழுது நீக்கம் செய்யவும், EB Transformer பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்யவும் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் இந்நகராட்சிக்கு கூடுதலாக 2 MLD குடிநீர் கிடைக்கப்பபெறும். எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.233/2025/இ1)
தீர்மான எண் 804
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–8**

உசிலம்பட்டி நகராட்சி அமைந்துள்ள அலுவல கட்டிடத்தில் " தமிழ் வாழ்க " " உசிலம்பட்டி நகராட்சி" பெயர் பலகையினை LED Digital Display Board –ஆக மாற்றம் செய்ய பழைய பெயர் பலகையினை அகற்றி, புதிதாக " தமிழ் வாழ்க " " உசிலம்பட்டி நகராட்சி" LED Digital Display Board பெயர் பலகையினை கொள்முதல் செய்து பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 235/2025/இ11
தீர்மான எண் 805
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–9**

மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 66848/2012/ஒய் 1 நாள் 18.05.2017.–இல் உத்தப்பநாயக்கனூர் கிராமம் புல எண் 87, 2.02.04 ஹெக்டேர் அளவுள்ள நிலத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உரக்கிடங்கு அமைக்க உசிலம்பட்டி நகராட்சிக்கு முன் நுழைவு அனுமதி வழங்கி

உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சி மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக உரக்கிடங்கு அமைக்க ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் Windrow plat form, plat form shed மற்றும் பாதுகாப்பு சுற்று சுவர் இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்களால் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்ட உத்தப்பநாயக்கனூர் கிராமம் புல எண் 87, 2.02.04 ஹெக்டேர் அளவுள்ள நிலத்தினை ஆணையாளர், உசிலம்பட்டி நகராட்சி என்ற பெயரில் சர்வே ஆவணங்களில் மாற்றம் செய்து வழங்க கோரி பிரேரணை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்களின் கடிதம் நக எண் 66848/2012/ஒய் 1 நாள் 15.11.2024 கடிதத்தில் மேற்படி நிலத்தின் மதிப்பு ரூ.20,00,000/- என தெரிவிக்கப்பட்டு இந்நகராட்சி பெயரில் நில உரிமை மாற்றம் செய்ய நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் சமூக விரோதிகள் அடிக்கடி அத்து மீறி உள்ளே நுழைந்து தீ வைக்கப்படுவதாக பொதுமக்களிடம் புகார்கள் வரப்பெற்றதன் அடிப்படையில் தற்போது வெளி நபர்கள் நடமாட்டத்தை குறைக்கும் வண்ணம் , தீ விபத்து ஏதும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டும் தண்ணீர் வசதிகள் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1619/2018/இ1)

தீர்மான எண் 806

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்-10</u>

உசிலம்பட்டி நகராட்சிப் பகுதியில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் பணியினை மேற்கொள்ளும் நபர்களை (Manual Scavengers) ஏதும் கண்டறியப்படவில்லை. இது தொடர்பான ஆட்சேபணைகளை தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்ட அறிவிப்பு கீழ்க்காணும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்தமைக்கான கீழ்க்காணும் கட்டணத் தொகையினை சம்பந்தப்பட்ட நாளிதழ்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நாளிதழின் பெயர் | கட்டணத் தொகை |
|---|---|---|
| 1 | KAL PUBLICATIONS (P) LTD – 103 Sq.cm -- தினகரன் நாளிதழ் | ரூ.6921.00 |
| 2 | திரு.பி. மதிவாணன் – 103 Sq.cm -- (தினமலர் நாளிதழ் ) | ரூ.10281.60 |

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1262 / 2017 / எச் 1 )

தீர்மான எண் 807
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–11</u>

இந்நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவில் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா போன்ற நோய்கள் பரவுவதை தடுக்கவும், கொசுப் புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்கவும் 36 நபர்கள் மகளிர் சுய உதவிக் குழு மூலம் 6 மாத காலங்களுக்கு (01.01.2025 முதல் 30.06.2025 வரை) பணியினை மேற்கொள்ள அகும் உத்தேச செலவினத் தொகை ரூ.24.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 0054 /2025/ எச்1)
தீர்மான எண் 808
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–12</u>

உசிலம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.22 பேரையூர் ரோட்டில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை M/S People Trust in Technical Institute திருமங்கலம் என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு எரியூட்டப்படும் பிரேதம் ஒன்றிற்கு ரூ.3000/– மனுதாரர்களிடம் இருந்து வசூல் செய்து அதில் 40% நகராட்சி பங்குத்தொகையாக ரூ.1200/–நகராட்சிக்கு செலுத்தி வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 28.02.2025ம் தேதி அன்று முடிவடைவதால், மேலும் ஓராண்டு காலத்திற்கு ஏற்கனவே நவீன எரிவாயு தகன மேடையினை பராமரித்து வரும் M/S People Trust in Technical Institute நிறுவனத்திற்கு உரிமத்தினை புதுபிக்கவும், ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டவாறு எரியூட்டப்படும் பிரேதம் ஒன்றிற்கு ரூ.3000/– மனுதாரர்களிடம் இருந்து வசூல் செய்து அதில் 40% நகராட்சி பங்குத்தொகையாக செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0152/2024/எச்.1)
தீர்மான எண் 809
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

மன்றப்பொருள்–13

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், ஆதிவழக்கம்போல் கொண்டாடப்படும் பாப்பாபட்டி அருள்மிகு ஒச்சாண்டம்மன் கோவில் மாசிப்பச்சை திருவிழாவினை முன்னிட்டு வார்டு 05 மதுரை ரோடு எட்டுப் பட்டரை கோவில், வார்டு 04 வத்தலக்குண்டு ரோட்டில் உள்ள அம்மச்சி அம்மன் கோவில், வார்டு 03 அன்னம்பாரிபட்டி சாவடி மற்றும் வடகாட்டுப்பட்டி சாவடி ஆகிய வளாகப் பகுதிகளை கிருமிநாசினிகள் கொண்டு சுத்தம் செய்யவும், கொட்டகை அமைக்கவும், JCB இயந்திரம் மூலம் பாதைகள் ஒதுக்கி சுத்தம் செய்யவும், 28.02.2025–ம் தேதி அருள்மிகு ஒச்சாண்டம்மன் கோவில் பெட்டி, உசிலம்பட்டி கருப்பு கோவில் வருவதால் S.O.R நகர் வத்தலக்குண்டு சாலையின் முன்பு நீர், மோர்பந்தல் அமைக்கவும், ஆணையாளர் மற்றும் நகர்மன்றதலைவர் அவர்களின் தலைமையின் கீழ் வடகாட்டுப்பட்டியில் உள்ள கோவில் பூசாரிகளுக்கு பூமாலை மூலமாக மரியாதை செலுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/– ஆகும். மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–

பொதுப் பணி அவரச அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி நோக்கி பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1413 /2024/எச்1)
தீர்மான எண் 810
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி